**பிரதிவாதி தரப்பு சாட்சி 2 ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டுள்ளார்.**

<u>8 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

தாவா சொத்துக்களை என் அப்பா லோகநாதன் மனையிடங்களாக பிரித்து பொது அதிகாரம் மூலமாக விற்பனை செய்தார் என்றால் சரிதான். அவை பொன்னுச்சாமிக்கவுண்டரின் தனிப்பட்ட சுவாதீனத்தில் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் 8 ம் பிரதிவாதியின் தகப்பனார் 30.11.1992 ம் தேதியன்று 4 ஏக்கர் 67 செண்ட் விஸ்தீரணம் உள்ள பூமியை கிரயம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படிவீதம் கிரயம் பெற்ற 8 ம் பிரதிவாதியின் தகப்பனார் சென்னியப்பகவுண்டரும் , பொன்னுச்சாமிக்கவுண்டரும் மற்ற பாகஸ்தர்களும் வாய்மொழியாக பாகக்கறார் செய்து கொண்டு தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். சென்னியப்பகவுண்டருக்கு நலந்திகடு கலந்து 4 ஏக்கர் 80 செண்ட் விஸ்தீரணம் உள்ள பூமியை பாகம் பிரித்து தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அந்தப் பூமியை அவர் 8 ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்து அவர் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி பூமியில் அவர் தனிப்பட்ட முறையில் தேங்காய்களம், கட்டிடங்கள் கட்டி தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அவ்வாறு 8 ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருவது வாதிகளுக்கும் மற்ற பங்குதாரர்களுக்கும் தெரியுமா என்றால் தெரியும். என் தகப்பனார் சதீஸ்குமார், அசோக்குமார் என்பவர்களுக்கு 2000 ம் வருடத்திலேயே தனிப்பட்டமுறையில் கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சண்முகசுந்தரம், செந்தில்குமார் மற்றும் சாந்தி என்பவர்களுக்கு மனையிடம் கிரயம் கொடுத்து அவர்கள் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை இவ்வாறு வீட்டு மனையிடங்களாக கிரயம் கொடுத்து அவர்கள் அனுபவித்து வரும் விபரம் வாதிகளுக்கும் மற்ற பங்குதாரர்களுக்கும் தெரியும். தாவா சொத்தில் தனிப்பட்ட அனுபவப்படி உட்பிரிவுகள் ஏற்படுத்தி பங்குதாரர்கள்

தனிப்பட்டமுறையில் அனுபவித்து வருவதை வாதிகளோ மற்ற பங்குதாரர்கள் ஒருவருக்கொருவரோ எப்போதும் ஆட்சேபனை செய்ததில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எப்போதும் பொதுச்சொத்தான அனுபவிக்கப்படவில்லை என்றாலும் பாகம் பிரிக்கப்பட்டு தனிப்பட்ட முறையில் அனுபவிக்கப்பட்டு வருகிறது என்றாலும் சரிதான். வாதிகள் தாவா சொத்தை பொதுச்சொத்து என்று கோரி எந்தவொரு பாகபாத்திய பரிகாரமும் கேட்க முடியாது என்றால் சரிதான்.

( மற்ற பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணைக்காக பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)